**<u>சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மலேரியா மற்றும் குடும்ப நலத்துறை சார்நிலைப் பணிகளுக்கான வரைவு சட்ட விதிகள் – 2009</u>**

1. சிறு தலைப்பும் தொடக்கமும்:–

இவ்வரைவு துணை விதிகள், சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறை, மலேரியா மற்றும் குடும்ப நலத்துறை சார்நிலைப் பணிகளுக்கான வரைவு சட்ட விதிகள் 2009 என்று அழைக்கப்படும்.

2. அமைப்பு:– இப்பணி சென்னை மாநகராட்சியின் வகுப்பு–3 மற்றும் 4ல் உள்ள கீழ்க்கண்ட 27 வகைப் பதவிகளாகக் கொண்டிருக்கும்.

**<u>வகுப்பு–3</u>**

| | | |
|---|---|---|
| வகை–1 | – | முதுநிலை பகுப்பாய்வாளர் |
| வகை–2 | – | இளநிலை பகுப்பாய்வாளர் |
| வகை–3 | – | புள்ளியியல் மேற்பார்வையாளர் |
| வகை–4 | – | சுகாதார ஆய்வாளர்/பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் |
| வகை–5 | – | மருந்தாளுநர் (அலோபதி) |
| வகை–6 | – | ஆய்வுக் கூடத் தொழில்நுட்பனர் |
| வகை–7 | – | சுகாதார அலுவலர்/ சுகாதாரப் பயிற்சியாளர் |
| வகை–8 | – | பூச்சியியல் உதவியாளர் |
| வகை–9 | – | கள உதவியாளர் |
| வகை–10 | – | ஆய்வு உதவியாளர்/நுண்ணுயிரியலாளர் |
| வகை–11 | – | உயிர் வேதியியலாளர் |
| வகை–12 | – | உதவி உயிர் வேதியியலாளர் |
| வகை–13 | – | மருத்துவப் பண்டக அலுவலர் |
| வகை–14 | – | செவிலி கண்காணிப்பாளர் |
| வகை–15 | – | உதவி செவிலி கண்காணிப்பாளர்/பொதுநல செவிலி பயிற்சியாளர்/ |
| வகை–16 | – | தாய் சேய் நல அலுவலர் (MCHO) |
| வகை–17 | – | செவிலிப் பணியாளர் |
| வகை–18 | – | தலைமை மருந்தாளுநர் |
| வகை–19 | – | துணை செவிலி, மகப்பேறு உதவியாளர்/ பல்நோக்கு சுகாதாரப்பணியாளர்/ |
| வகை–20 | – | பெண் சுகாதாரப் பார்வையாளர் |
| வகை–21 | – | திட்ட உணவியலாளர் |
| வகை–22 | – | தலைமைச் சமையலர் |
| வகை–23 | – | புள்ளியியல் உதவியாளர் |
| வகை–24 | – | இ.சி.ஜி. தொழில்நுட்பனர் |
| வகை–25 | – | தொலைபேசி இயக்குபவர்(தொற்றுநோய் மருத்துவமனை) |

**<u>வகுப்பு–4</u>**

| | | |
|---|---|---|
| வகை–26 | – | இளநிலை சமையலர் |
| வகை–27 | – | மயான உதவியாளர் |

3. நியமனம்:– பத்தி–3ல் உள்ள தொடர்பான பதிவுகளில் குறிப்பிட்டுள்ள பணி நியமனத்திற்கான முறைகளின்படி பத்தி–2ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கான நியமனம் செய்யப்படும்.

4. சென்னை மாநகராட்சி சார்நிலைப் பணியாளர்களுக்கான துணைவிதிகள் பகுதி–1ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிகள், சுகாதாரம், மலேரியா மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை ஆகிய துறைகளுக்கு பொருந்தும்.

<u>வகுப்பு–3</u>

| வ. எண். | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01. | முதுநிலை பகுப்பாய்வாளர் | 1. இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்தில் இருந்து பதவி உயர்வின் மூலம்<br><br>2. மாநில அரசிலிருந்து அயற்ப்பணி மூலம்<br><br>3. நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்றதொரு முதுகலை அறிவியல் பட்டம் (வேதியியல்) அல்லது (உயிர் வேதியியல்) அல்லது (பால்பண்ணை வேதியியல்) அல்லது (உணவுத் தொழில்நுட்பம்) அல்லது (நுண்ணியிரியல்) அல்லது (உணவு மற்றும் மருந்துகள் தொழில்நுட்பம்) | நடைமுறையில் உள்ளது 5300–150–8300<br><br>திருத்தப்பட்டது 9300–34800 + நிலை ஊதியம் 4300<br><br>நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜனவரி முதல் நாள் |
| 02. | இளநிலை பகுப்பாய்வாளர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம்<br><br>3. நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்றதொரு முதுகலை அறிவியல் பட்டம் (வேதியியல்) அல்லது (உயிர் வேதியியல்) அல்லது (பால்பண்ணை வேதியியல்) அல்லது (உணவுத் தொழில்நுட்பம்) அல்லது (நுண்ணியிரியல்) அல்லது (உணவு மற்றும் மருந்துகள் தொழில்நுட்பம்) | நடைமுறையில் உள்ளது 4500–125–7000<br><br>திருத்தப்பட்டது 5200–20200 + நிலை ஊதியம் 2800<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள் |
| 03. | புள்ளியியல் மேற்பார்வையாளர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம்<br><br>3. நேரடி நியமனம் | 1. இளங்கலை அறிவியல் பட்டம் (புள்ளியியல்)<br><br>2. சென்னை ICMRல், புள்ளியியல் விவர மேலாண்மைப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் | நடைமுறையில் உள்ளது 5500–175–9000<br><br>திருத்தப்பட்டது 9300–34800 + நிலை ஊதியம் 4400<br><br>நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜனவரி முதல் நாள் |

| வ. எண். | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 04. | சுகாதார ஆய்வாளர்/பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நி9999லப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. பதவிமாற்றம் வழியாக<br><br>3. நேரடி நியமனம் | 1. இளங்கலை அறிவியல் (வேதியியல்) பட்டம்<br><br>2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் நல ஆய்வாளர் படிப்பில் முதுகலை பட்டயம் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>3. கணினிப் பயிற்சியில் சான்றிதழ் | நடைமுறையில் உள்ளது 4500–125–7000<br><br>திருத்தப்பட்டது 5200–20200 + நிலை ஊதியம் 2800<br><br>நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜூலை முதல் நாள் |
| 05. | மருந்தாளுநர் (அலோபதி) | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம்<br><br>3. நேரடி நியமனம் | 1. குறைந்தபட்ச தகுதி அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்)<br><br>2. மருந்தியல் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் | நடைமுறையில் உள்ளது 4500–125–7000<br><br>திருத்தப்பட்டது 5200–20200 + நிலை ஊதியம் 2800<br><br>நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜூலை முதல் நாள் |
| 06. | ஆய்வுக் கூடத் தொழில் நுட்பனர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம்<br><br>3. நேரடி நியமனம் | +2 தேர்ச்சி மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து 2 வருட மருத்துவ ஆய்வகத் தொழில் நுட்பனர் படிப்பில் பட்டயம் | நடைமுறையில் உள்ளது 4000–100–6000<br><br>திருத்தப்பட்டது 5200–20200 + நிலை ஊதியம் 2400<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள் |
| 07. | சுகாதார அலுவலர் / சுகாதார பயிற்சியாளர் | 1. தகுதிகாணப் பெற்ற சுகாதார ஆய்வாளர் பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலமாக<br><br>2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம் | 1. இளங்கலை அறிவியல் பட்டம் (வேதியியல்)<br><br>2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்படும் சுகாதார ஆய்வாளர் பதவிக்கான படிப்பில் முதுகலைப் பட்டயம் | நடைமுறையில் உள்ளது 5900–200–9900<br><br>திருத்தப்பட்டது 9300–34800 + நிலை ஊதியம் 4500<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் முதல் நாள் |

| வ. எண். | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 08. | பூச்சியியல் உதவியாளர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்ற முதுகலை அறிவியல் பட்டம் (விலங்கியல்) அல்லது முதுகலை அறிவியல் (மருத்துவ பூச்சியியல்) | நடைமுறையில் உள்ளது **5900–200–9900**<br><br>திருத்தப்பட்டது **9300–34800** + நிலை ஊதியம் **4500**<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள் |
| 09. | கள உதவியாளர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் | 1. குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி (பத்தாம் வகுப்பு தேர்ச்சி)<br><br>2. பூச்சிகள் பரவுவதைத் தடுப்பது குறித்து சுகாதாரத் துறையில் நடத்தப்படும் கட்டாயப் பயிற்சியில், பதவி உயர்வு பெறுபவர்/ நேரடி நியமனதாரர் கட்டாயமாகப் பங்கேற்கவேண்டும் | நடைமுறையில் உள்ளது **3200–85–4900**<br><br>திருத்தப்பட்டது **5200–20200** + நிலை ஊதியம் **2000**<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள் |
| 10. | ஆய்வு உதவியாளர்/ நுண்ணுயிரி–யலாளர் | 1. நேரடி நியமனத்திற்க நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து மருத்துவ நுண்ணுயிரியலில் முதுகலை அறிவியல் பட்டம் | நடைமுறையில் உள்ளது **6500–200–10500**<br><br>திருத்தப்பட்டது **9300–34800** + நிலை ஊதியம் **4900**<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள் |
| 11. | உயிர் வேதியியலாளர் | 1. உதவி உயிர் வேதியியலாளர் பதவியில் இருந்து பதவி உயர்வின் மூலம்<br><br>2. மாநில அரசில் இருந்து வேற்றுப் பணி மூலம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து உயிர் வேதியியலில் முதுகலை அறிவியல் பட்டம் | நடைமுறையில் உள்ளது **5500–175–9000**<br><br>திருத்தப்பட்டது **9300–34800** + நிலை ஊதியம் **4400**<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள் |

| வ. எண். | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 12. | உதவி உயிர் வேதியியலாளர் | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து இளங்கலை அறிவியல் பட்டம்(உயிர் வேதியியல்) | நடைமுறையில் உள்ளது<br>**4500–125–7000**<br><br>திருத்தப்பட்டது<br>**5200–20200** +<br>நிலை ஊதியம்<br>**2800**<br><br>நிர்ணய நாள்<br>ஒவ்வோராண்டும்<br>ஏப்ரல்<br>முதல் நாள் |
| 13. | மருத்துவப் பண்டக அலுவலர் | தலைமை மருந்தாளுநர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து மருந்தாளுநர் பட்டப் படிப்பு | நடைமுறையில் உள்ளது<br>**5900–200–9900**<br><br>திருத்தப்பட்டது<br>**9300–34800** +<br>நிலை ஊதியம்<br>**4500**<br><br>நிர்ணய நாள்<br>ஒவ்வோராண்டும்<br>ஏப்ரல்<br>முதல் நாள் |
| 14. | செவிலி கண்காணிப்பாளர் | உதவி செவிலி மேற்பார்வையாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் | 1) இளங்கலை அறிவியல் பட்டம் (செவிலியர்)<br><br>2) தமிழ்நாடு செவிலியர் அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். | நடைமுறையில் உள்ளது<br>**5900–200–9900**<br><br>திருத்தப்பட்டது<br>**9300–34800** +<br>நிலை ஊதியம்<br>**4500**<br>நிர்ணய நாள்<br>ஒவ்வோராண்டும்<br>ஏப்ரல்<br>முதல் நாள் |
| 15. | உதவி செவிலி கண்காணிப்பாளர்/ பொதுநல செவிலி பயிற்சியாளர்/ | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம் | 1. இளங்கலை அறிவியல் பட்டம் (செவிலியர்)<br><br>2. செவிலி கல்வி மற்றும் நிர்வாகத்தில் பட்டயம்<br><br>3. தமிழ்நாடு செவிலியர் அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் | நடைமுறையில் உள்ளது<br>**5900–150–8300**<br>திருத்தப்பட்டது<br>**9300–34800** +<br>நிலை ஊதியம்<br>**4300**<br>நிர்ணய நாள்<br>ஒவ்வோராண்டும்<br>ஏப்ரல்<br>முதல் நாள் |

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 16. | தாய் சேய் நல அலுவலர் (MCHO) | 1.செவிலிப் பணியாளர் அல்லது பெண் சுகாதாரப் பார்வையாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் | **1.** இளங்கலை அறிவியல்(செவிலியர்) பட்டப்படிப்பு தமிழ் நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அ.** செவிலியர் 10 மாத பொதுசுகாதார செவிலியில் பட்டயப் படிப்பு முடித்திருக்கவேண்டும்<br>**ஆ.** பெண் சுகாதார பார்வையாளர் 22 மாத பொது சுகாதார செவிலிய பட்டயப்படிப்பு முடித்திருக்கவேண்டும்<br><br>**2.** தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926ன்படி பிரிவு 1A அல்லது 1Bன்படி செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்<br><br>**3.**தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926ன்படி பிரிவு 1C ன்படி தாதியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் | நடைமுறையில் உள்ளது **5900–200–8300**<br><br>திருத்தப்பட்டது **9300–34800** + நிலை ஊதியம் **4500**<br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள் |
| | | 2. நேரடி நியமனம் | **1)** இளங்கலை அறிவியல்(செவிலியர்) பட்டப்படிப்பு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**2.** தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926ன்படி பிரிவு 1A அல்லது 1Bன்படி செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்<br><br>**3.**தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926ன்படி பிரிவு 1C ன்படி தாதியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் | |

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 17. | செவிலிப் பணியாளர் | 1. நேரடி நியமனம் | 1. தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் செவிலியர் மற்றும் தாதியர் பட்டயம்<br><br>2. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926 ன்படி பிரிவு 1A அல்லது 1B ன்படி செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்.<br><br>3. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926 ன்படி பிரிவு 1C ன்படி தாதியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ். | நடைமுறையில் உள்ளது 5000–150–8000 திருத்தப்பட்டது 9300–34800 + நிலை ஊதியம் 4200<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள் |
| 18. | தலைமை மருந்தாளுநர் | மருந்தாளுநர் (அலோபதி) பதவியிடத்தில் இருந்து பதவி உயர்வின் மூலம் | 1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட இளம் மருந்தாளுநர் பட்டம்.<br>2. தமிழ்நாடு மருந்தாளுநர் அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் | நடைமுறையில் உள்ளது 5300–150–8300 திருத்தப்பட்டது 9300–34800 + நிலை ஊதியம் 4200<br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜுலை முதல் நாள் |
| 19. | பல்நோக்கு சுகாதார பணியாளர்/<br><br>துணை செவிலி/<br><br>மகப்பேறு உதவியாளர் | நேரடி நியமனம் | 1. +2 தேர்ச்சி மற்றும் 18 மாத துணை செவிலி/ மகப்பேறு உதவியாளர்/ பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்/ பயிற்சி தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. செவிலியர் அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்<br>(பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட கல்வித்தகுதியை , தற்போதுள்ள அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் பெற்றிருந்தால் மட்டுமே பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படும். | நடைமுறையில் உள்ளது 3200–85–4900<br><br>திருத்தப்பட்டது 5200–20200 + நிலை ஊதியம் 2000<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜுலை முதல் நாள்<br><br>துணை செவிலி மகப்பேறு உதவியாளர்/ இந்த பணியிடங்கள் பெண்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும் |

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 20. | பெண் சுகாதாரப் பார்வையாளர் | 1.பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்/ துணை செவிலி / மகப்பேறு உதவியாளர்/ பதவியிடங்களில் இருந்து பதவி உயர்வின் மூலம் | 1. துணை செவிலி மகப்பேறு உதவியாளர்/ பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்/ பதவிகளில் 5வருடம் அனுபவம் மற்றும் பெண் சுகாதாரப் பார்வையாளர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்<br>2. தமிழ்நாடு பெண் சுகாதார பணியாளர் மன்றத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | நடைமுறையில் உள்ளது 5000–150–8000<br><br>திருத்தப்பட்டது 9000–34800 + நிலை ஊதியம் 4200<br><br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள் |
| | | 2. அயற் பணி மூலம் | 1)தமிழ்நாடு அரசின் பொதுநல இயக்ககத்தில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள்/ உதவி செவிலி / மகப்பேறு உதவியாளர்/ ஆகிய பதவிகளில்5 ஆண்டுகள் பணிபுரிந்து மகளிர் நலப் பார்வையாளர் பயிற்சியும் பெற்றவர்களுக்கு அயற்ப்பணி நியமனம் மூலமும், சென்னை மாநகராட்சியில் தகுதியுள்ள நபர்கள் இல்லாத பட்சத்தில் மட்டுமே அயற்ப்பணி நியமனம் மேற்கொள்ளப்படும் | |
| | | 3. நேரடி நியமனம் | 1) பெண் சுகாதாரப் பார்வையாளர் பயிற்சி முடித்திருக்கவேண்டும்.<br>2) தமிழ்நாடு பெண் சுகாதார பணியாளர் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் | |
| 21. | திட்ட உணவியலாளர் | நேரடி நியமனம் மூலம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட இளம் அறிவியல் பட்டம் (ஊட்டச்சத்து) | நடைமுறையில் உள்ளது 5900–200–9900<br>திருத்தப்பட்டது 9300–34800 + 4500<br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள் |

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 22. | தலைமைச் சமையலர் | 1. இளநிலை சமையலர் பதவியில் இருந்து பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட உணவாக்கத் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட உணவாக்கத் தொழில்நுட்பப் பட்டயம் | நடைமுறையில் உள்ளது **4000–100–6000** திருத்தப்பட்டது **5200–20200 +** நிலை ஊதியம் **2400** நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜுலை முதல் நாள் |
| 23. | புள்ளியியல் உதவியாளர் | 1, நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. நேரடி நியமனம் மூலம் | புள்ளியியலில் அல்லது புள்ளியியல் சிறப்புப் பாடத்துடன் கணிதத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். | நடைமுறையில் உள்ளது **5300–150–8300**<br><br>திருத்தப்பட்டது **9300–34800** தர ஊதியம் **4300** |
| 24. | இ.சி.ஜி. தொழில்நுட்பனர் | 1. நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. நேரடி நியமனம் மூலம் | +2 தேர்ச்சி மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து இ.சி.ஜி.டெக்னீசியன் பட்டயம் பெற்றவர்கள் | **5200–20200** தர ஊதியம் **2400** |
| 25. | தொலைபேசி இயக்குபவர் (தொற்றுநோய் மருத்துவமனை) | 1. நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. நேரடி நியமனம் மூலம் | 1, குறைந்தப்பட்ச கல்வித் தகுதி<br>2, தொலைபேசி இயக்குபவர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | நடைமுறையில் உள்ளது **3200–85–4900**<br><br>திருத்தப்பட்டது **5200–20200 +** நிலை ஊதியம் **2000** |

<u>**வகுப்பு–4**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | இளநிலை சமையலர் | 1. நேரடி நியமனம் மூலம்<br><br>2. பணிமாற்றம் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட உணவாக்கத் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட உணவாக்கத் தொழில்நுட்பப் பட்டயம் | நடைமுறையில் உள்ளது **2550–55–2660–60–3200** திருத்தப்பட்டது **4800–10000 +** நிலை ஊதியம் **1300** நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அக்டோபர் முதல் நாள் |
| 27. | மயான உதவியாளர் | 1. நேரடி நியமனம் மூலம் | 1) 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்,<br><br>2) இடுகாடு தொழிலில் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் | நடைமுறையில் உள்ளது 2550–55–2660–60–3200 திருத்தப்பட்டது 4800–10000 + நிலை ஊதியம் 1300 |
| | | 2. துப்புரவு பணியாளர் பதவியிலிருந்து பணிமாற்றம் அடிப்படையில். | 1) 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும், | |

5. தகுதிகாண் பருவம்:– ஒரு பதவியில் நேரடி நியமனம் செய்யப்பட்டவருக்கு தகுதிகாண் பருவம் தொடர்ச்சியான மூன்றாண்டு பணியில் இரண்டாண்டுகள், அவர் பதவியில் சேரும்போது தகுதிகாண் பருவமாக இருக்கும்.

6. நியமனங்களில் ஒதுக்கீடு:– எந்த ஒரு பதவியிலும், நேரடி நியமனங்களில் நியமனங்களுக்கான ஒதுக்கீடு விதிகள் (பொது விதிகள் 22) பொருந்தும்.

7. தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சிப் பெறுதல்:– ஒரு பணியின் ஒரு வகையில் நியமனம் செய்யப்பட்ட தமிழை தவிர வேறு மொழியை முதல் மொழியாக பயின்றவர்கள், அவர்கள் தகுதிகாண் பருவ காலகட்டத்திற்குள் (அதாவது இரண்டு ஆண்டுகள்) தமிழ்நாடு தேர்வாணையத்தினால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். தவறினால், அவர்கள் அந்த தகுதியினை பெறும் வரையில் அவர்களின் ஆண்டு ஊதிய உயர்வு மூன்றாம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்கப்படும். அவர்கள் தமிழ்மொழி தேர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும். தவறினால் அவர்கள் உடனடியாக பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

8. ஊர்திப்படி:– இப்பணியமைப்பில் உள்ள பணியிடங்களில் ஊர்திப்படி அனுமதிக்கப்பட்ட பதகிளுக்கு மட்டும் மாநகராட்சி நிதியிலிருந்து அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் வரையறைகளுக்குட்பட்டு ஊர்திப்படி வழங்கப்படவேண்டும்.

9. ஊதியப் படிகள், விடுப்பூதியம், ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி மற்றும் இன்ன பிற பணி நிலைமைகள்:– மாநகராட்சிப் பணியமைப்பில் உள்ள பணிகளுக்கான ஊதியங்களை முறைப்படுத்தும் விதிகள், அடிப்படை விதிகள் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள விதிகள், அவைகள் எந்த அளவுக்கு பொருந்துமோ அந்த அளவிற்கும், எந்த அளவுக்கு பொருந்தாதோ அந்த அளவு தவிர, ஒவ்வொரு மாநகராட்சிப் பணியாளர்களுக்கும் அவர்களின் ஊதியம், படிகள், விடுப்பூதியம், ஓய்வூதியம் மற்றும் இன்ன பிற பணி நிலைமைகள் ஆகியவற்றிற்கு பொருந்தும்.